அனைத்துலகத் தமிழ்க் கல்வி பண்பாடு அறிவியல் மேம்பாட்டு இணையம்
International Tamil Education Cultural Scientific Development Federation

# அரையாண்டுத்தேர்வு 2015-2016
# தமிழ்மொழி

பெயர்:-______________________________

ஆண்டு 11

தாள் 2 மொழிபெயர்ப்பு, கருத்தறிதல்
120 நிமிடங்கள்

கீழேயுள்ள அறிவித்தல்களை முதலில் வாசிக்கவும்!

- ☐ எல்லா வினாக்களுக்கும் விடையளிக்கவும்!
- ☐ விடைத்தாள்கள் ஒவ்வொன்றிலும் உங்கள் பெயரை எழுதவும்!
- ☐ வினாக்களுக்கு விடையளிக்கும் போது வினாவுக்குரிய எண்ணை விடைத்தாளில் எழுதவும்!
- ☐ itec நிறுவனத்தின் முத்திரையிடப்பட்ட தாள்களில் மட்டுமே விடையளிக்கவும்!
- ☐ ஒவ்வொரு வினா அல்லது வினாப்பகுதியின் இறுதியில் விடைகளுக்குரிய புள்ளிகள் அடைப்புக் குறிக்குள் தரப்பட்டுள்ளது.
- ☐ விடைத்தாள்கள் எல்லாவற்றையும் ஒன்றாக்கி வினாத்தாளுடன் தேர்வு மேற்பார்வையாளரிடம் கையளிக்கவும்!
- ☐ இவ் வினாத்தாள் கேம்பிறிட்ச் பல்கலைக் கழகத்தின் கல்விப் பொதுத் தராதர உயர்தரநிலைப் பாடத்திட்டத்திற்கு அமையவும், அப் பல்கலைக்கழகத்தின் தேர்வு வினாத்தாள்களின் அடிப்படையிலும் அமைக்கப் பெற்றது.

பகுதி 1

1) கீழேயுள்ள உரைப்பகுதியை உங்கள் வாழ்விட மொழியில் எழுதுக!

மற்ற உயிரினம் எதற்குமே இல்லாத சிந்திக்கும் ஆற்றல் மனித இனத்திற்கு மட்டுமே அமைந்திருக்கிறது. சிந்திக்கும் ஆற்றல் உள்ள மனிதன், தன் அறிவுக்குச் சரியாகப் பட்டாலன்றி எவ்விதக் கட்டுப்பாடுகளுக்கும் அடங்கி நடக்கமாட்டான். அப்படியே அவன் பிறரின் வற்புறுத்தலுக்கு இணங்கிக் கட்டுப்பட்டு அடங்கி நடந்தாலும், அது தற்காலிகமானதாகவே இருக்கும். நீடித்து நிற்காது. அந்தத் தடைகள் விலகித் தனக்குச் சுதந்திரம் கிடைக்கும்போது, அவன் தன் விருப்பப்படியே நடக்க முயல்வான். இது நாம் எதிர்பார்ப்பதற்கு நேர் எதிரான பலன்களைத்தான் ஏற்படுத்தும்.

நம்முடைய உத்தரவுக்குக் குழந்தைகள் கட்டுப்பட்டு நடக்க வேண்டும் என்று எதிர்பார்க்காமல், அவர்கள் தாமே சிந்தித்து முடிவு செய்வதற்கு நாம் உதவி புரிய வேண்டும். இதைச் செய், அதைச் செய் என்று சொல்வதைவிட இதை ஏன் செய்ய வேண்டும், அதை ஏன் செய்யக் கூடாது என்பதையும் அவர்கள் சிந்தித்து முடிவு செய்ய வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுப்பதுதான் நல்லது. இதன் மூலம் குழந்தைகளின் சிந்தனைத் திறன் வளம் பெறுகிறது.

(10 புள்ளிகள்)

2) கீழேயுள்ள ஆங்கில உரைப்பகுதியை தமிழில் எழுதுக!

The old man waited for the clock to strike two. He didn‘t like going to the market before this time. In the mornings, the market was full of mothers, rushing around with small children, trying to get their shopping done before picking up their older children from school.

At lunch time, local traders and office workers stopped at the stalls to pick up their lunch.

After this rush, a brief calm descended on the market in the early afternoon. At this time, the old man could shuffle around the stalls slowly. He would stop to talk to the traders he knew well, having visited many of them for well over ten years.

Many would ask after his health and his children, who were now working in big cities. Some would turn back and retrieve the best fruit and vegetables that they had set aside for him.

This was the old man‘s time for interacting with the world. This was the time between the solitude of morning prayers and the preparation of a simple meal in the evening from his afternoon purchases.

(20 புள்ளிகள்)

பகுதி 2

கீழேயுள்ள பகுதியைக் கவனமாகப் படிக்கவும்!

## பண்பாட்டுச் சிதைவு

தற்போது பண்பாட்டுச் சிதைவு ஏற்படுவதை நாம் கண்கூடாகக் காண்கின்றோம். சமூகச் சீர்கேடுகளில் இதுவும் ஒன்றாகும். குறிப்பாக நமது பள்ளிப் பிள்ளைகளுக்கிடையே இம்மாதிரியான சிக்கல்கள் உருவாகி வருகின்றன. கொலை, கொள்ளை, திருட்டு, போதைப்பொருள் பயன்பாடு போன்ற குற்றச் செயல்கள் மலிந்து காணப்படுகின்றன.

குடும்பச் சுமையைக் குறைக்க குடும்பத் தலைவனும் குடும்பத் தலைவியும் போட்டி போட்டுக்கொண்டு பொருள் ஈட்டுகின்றனர். அதனால், பிள்ளைகளை முழுமையாகக் கவனிக்க இயலாமல் போகின்றது. ஒருவருடைய வருமானத்தில் குடும்பப் படகைச் செலுத்த வேண்டியிருப்பதால், குடும்பத் தலைவியும் வேலைக்குச் செல்ல வேண்டியுள்ளது. இருவரும் வேலை செய்வதால் ஓரளவு குடும்பச் சுமை குறையும் என்ற நம்பிக்கை, பணி முடிந்து களைத்து வரும் பெற்றோருக்குப் பிள்ளைகளைக் கவனிக்க இயலாது போகின்றது. பிள்ளைகளின் தேவைகளை அறியாமல் அவர்களைக் கடின சொற்களால் திட்டித் தீர்த்து விடுவதும் உண்டு. அன்றாட வாழ்க்கைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய அலைந்து கொண்டிருக்கும் பெற்றோர்களுக்குப் பிள்ளைகளிடம் கனிவாகப் பேசுவதற்குக்கூட நேரமில்லையென்பது வேடிக்கையாக இருக்கின்றது. இதனால் மனமுடைந்து போகின்ற பிள்ளைகள் மாற்று வழிகளை நாடுகின்றனர். நல்ல நண்பர்கள் கிடைத்தால் அது அவர்கள் செய்த புண்ணியம்.

நண்பர்களைத் தேர்ந்தெடுப்பதில் பிள்ளைகள் கைதேர்ந்தவர்கள் அன்று. கூடா நட்பு இப்பிள்ளைகளின் எதிர்காலத்தையே நாசமாக்கி விடுகின்றது. நண்பர்களிடம் கிடைக்கும் ஆதரவு, நெருக்கம் பெற்றோர்களிடம் கிடைப்பதில்லை. நல்லவருடன் சேருவது மலருடன் சேர்ந்த நாரைப் போன்றதாகும். இருந்தபோதிலும் பெரும்பாலானோர் மலர் போன்றவருடன் சேருவது கிடையாது. கூடா நட்பு இறுதியில் இவர்களைத் துன்பம் என்னும் பள்ளத்தில் தள்ளிவிடுகின்றது. வீழ்ந்தவர்கள் மீளச் சிரமப்படுகிறார்கள்.

பெரியோர்கள் செய்வதைச் சிறியவர்கள் கண்மூடித்தனமாகப் பின்பற்ற வாய்ப்பாகிறது. நல்ல செயல்கள் நல்லவர்களை உருவாக்கும். புகை பிடிப்பது, மது அருந்துவது, பெற்றோர்களுடன் சண்டைகள் போடுவது, பண்பற்ற சொற்களைப் பயன்படுத்துவது போன்ற எதிர்மறையான செயல்கள் பிள்ளைகளின் மனதைப் பெரிதும் பாதித்துவிடும். இன்று கல்வியறிவுள்ள பெற்றோர்களும் கல்வியறிவில்லாத பெற்றோர்களும் இம்மாதிரியான தவறுகளை உணர்வதில்லை. ஆனால், பலியாவது சிறுவர்கள்தாம்.

இன்றைய பிள்ளைகள் நாளைய இளைஞர்கள். நல்ல விதைகளை நட்டால்தான் நாளை நல்ல விளைச்சலைக் காணலாம். இதற்கு மாறாக பல் கலாசார அதிர்ச்சிகளுக்கிடையே வளரும் இப்பிள்ளைகள் நன்மை தீமையறியாது வளர்கின்றனர். அத்தீய விளைவுகளின் தீமைகளை அறியும் நிலையில் அவர்கள் இல்லை. தீச்செயல்களுக்குத்தான் அதிகக் கவர்ச்சி. சான்றாகத் தற்போது வரும் பல சினிமாப் படங்கள் நெறிகளுக்கு உட்பட்டவையாகத் தெரியவில்லை. மாறாகப் பள்ளிப் பிள்ளைகளின் சிந்தனையைச் சிதறடிக்கக் கூடியனவாக உள்ளன. உரையாடல்கள், ஆபாசக் காட்சிகள், இள வயதிலேயே காதலுணர்வைத் தூண்டக்கூடிய திரைப்படங்கள் மலிந்துவிட்டன. வெட்டு, குத்து எனப் பல படங்கள் வன்முறையை வளர்க்கின்றன. வன்முறைத்தனத்தை அடிக்கடி பார்ப்பதால் அவை இலகுவாகவும் பள்ளி மாணவர்களைக் கவர்ந்துவிடுகின்றன. நன்மை தீமைகளைச் சீர்தூக்கிப் பார்க்கத் தெரியாத பருவத்தில் பலர் சட்டக் காவலாளர்களால் கைது செய்யப்படுகின்றனர்.

பொய்யான விளம்பரங்களும் நமது பண்பாட்டு அழிவுக்கு வழிவகுக்கின்றன எனலாம்.
மேலைநாட்டவரின் உடையலங்காரங்கள், இசை, பொய்யான தோற்றம் போன்றவை நமது இளைய சமுதாயத்தினரின் சிந்தனையைச் சீரழித்துத் திசை திருப்புகின்றன. இவற்றுக்குத் தனியார் வானொலி நிறுவனங்கள் மற்ற பல்லூடகங்களும் பங்கு வகிக்கின்றன. இவை வியாபார ரீதியில் இருப்பதனால் பொய்யான விளம்பரத்திற்குத்தான் கவர்ச்சி அதிகம். பணமே முதலாக இருப்பதாலும் மேலும் மேலும் இப்பணத்தைப் பெருக்குவதற்காகவும் விளம்பரங்கள் இளையோரின் கண்களைக் குருடாக்கிவிடுகின்றன. அரசாங்கம் வகுக்கும் சட்ட திட்டங்களுக்கு ஒரு சில நிறுவனங்கள்தாம் செவிசாய்க்கின்றன. மற்றவை இலாபத்தையே குறிக்கோளாகக் கொண்டுள்ளன. பாதிப்புறும் இளைய தலைமுறையினரின் எதிர்காலத்தை யாரும் பொருட்படுத்துவதில்லை.
இவ்வாறு போய்க்கொண்டிருந்தால் நாளைக்கு நல்ல தலைவர்கள் உருவாகுவது குதிரைக்கொம்பாகிவிடும். அரசாங்க நிறுவனங்களும் அரசாங்க சார்பற்ற நிறுவனங்களும் இப் பிரச்சனையைத் தீர்ப்பதில் தத்தம் பங்கை வகிக்க வேண்டும். ஒருமைப்பாடு எல்லா நிலைகளிலும் காணப்பட வேண்டும். குடும்பம் ஒரு பல்கலைக்கலகம் என்று இல்லாமல் பல்கலைக்கழகமாக அமைய வேண்டும். பெற்றோர்கள் வீட்டில் அர்ப்பணிப்பு உணர்வுடன் பிள்ளைகளின் தேவைகளை அவ்வப்போது அறிந்து வழிகாண வேண்டும். இன்றைய பிள்ளைகள்தாம் நாளைய தலைவர்கள்.

3) பின்வரும் வினாக்களுக்கு பனுவலில் இருந்து அப்படியே சொற்களையோ வாக்கியங்களையோ எடுத்தெழுதாது விடைகளைத் தருக!

அ) பெற்றோர் தங்கள் பிள்ளை வளர்ப்பில் முழுமையாக அக்கறைகொள்ளாமல் போவதற்கான காரணம் யாது? (2)

ஆ) பெரும்பாலான பிள்ளைகள் குற்றச்செயல்களில் ஈடுபடுவதற்கான காரணங்கள் எவை? (3)

இ) பிள்ளை வளர்ப்பில் பெற்றோர் விடும் பிழைகள் யாவை? (3)

ஈ) பண்பாட்டுச் சிதைவைத் தடுப்பதில் அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் என்ன பங்கை வகிக்கலாம்? (4)

உ) இச்சிக்கலைத் தீர்ப்பதில் பெற்றோரின் பங்கு யாது? (3)

(15 புள்ளிகள்)

4) பின்வரும் விடயங்களை விளக்கி எழுதுக!

அ) கட்டுரையாளரின் கருத்துகளோடு உடன்பட்டு, இச்சிக்கலைத் தீர்ப்பதற்கு நீங்கள் கூறும் ஆலோசனைகளை எழுதுக! (10)

ஆ) “பல்கலாசார அதிர்ச்சிகள“ என்ற சொற்றொடரிலிருந்து நீங்கள் விளங்கிக் கொள்வது யாது? நீங்கள், உங்கள் பெற்றோர் சந்தித்த நிகழ்வுகளை உதாரணம் காட்டி விளக்குக! (5)

(15 புள்ளிகள்)